

கே. எம். கோபால் :

# பழைமையில் ஊற்றெடுக்கும் புதுமை!

இந்திரன்

இந்தியாவைப் போன்ற லைப் பாரம்பரியம் கொண்ட நாட்டில், நமது முன்னோர் ான சிற்பிகள் தங்களது லையில் தொடாமல் விட்ட அரங்கள் மிகவும் குறைவு. ந்தச் சிற்ப ஓவிய சாதனை ளை உண்மையாக புரிந்து, ள் வாங்கிக் கொண்ட இன் றைய ஓவியர்கள் அதற்குப் றகும் தங்களது தூரிகையை க்குகிறார்கள் என்றால் தனை அசாத்திய துணிவு ன்றுதான் கூற வேண்டும். லனி ஆதிக்க ஆட்சியினால் மது கலையின் உரிய மதிப்பு றைந்துவிடக் கூடாது என்று னைத்த நமது ஓவியர்கள், ங்களது தேசிய அடையாளங் ளைக் காப்பாற்றிக் கொள்ள யாது முயன்றனர். இதன் ளைவாக தமது பழைய ப், சிந்தனை மரபு ளைத் தேடி அவற்றிலிருந்து பற்ற உணர்வுகளினால் மது இன்றைய கலையைக் ட்டினார்கள். இதனால்தான் ந்து மதத்தின் ஒரு சிந்தனைப் ரிவான 'தாந்திரீகம்' தனது ழுவுக் குறியாக பயன்படுத்தி ந்த பல குறியீடுகளை நவீன லைக்கு அளித்தது.

இதனால் 'தாந்திரீக ஓவியங் ள்' எனும் ஒரு புதிய நவீன ாணி கிளைவிட்டது. இத ால் பெரிதும் பாதிக்கப்பட்ட வியரும் சிற்பியுமாக, இன்று சாழ மண்டலம் ஓவியர் ிராமத்தில் வாழும் 62 வயது ிரம்பிய கே. எம். கோபால் யங்கி வருகிறார்.

சென்னை ஓவியக் கல்லூரியில் படித்த காலத்தில் எல்லா முத்த ஓவியர்களையும் போலவே இவரும் வங்காள பாணி ஓவியங்களால் பெரிதும் கவரப்பட்டு இருக்கிறார். 'டெம்பரா' வண்ணத்தில் அவர் அன்று செய்த ஓவியங்கள் நமது மண்ணின் பண்பாட்டை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்தவை.

காதில் கடுக்கனும், பெரிய மீசையும், பிரெஞ்சு தாடியுமாக காட்சி அளிக்கும் இந்த சேலத்து ஓவியரிடம் ஒருமுறை தமிழர்களின் ஓவியப் பாரம்பரியம் குறித்து கேட்கப்பட்ட போது அவர் கோபப்பட்டார்.

"ஒரு நாளின் தொடக்கத்தில் முதன் முதலாக வீட்டு வாசலில் நீர் தெளித்து சித்திரக் கோலம் ஒன்றை வரைந்த பிறகே தனது பிற வேலைகளைத் தொடங்கும் தமிழ்ப் பெண் வாழும் நமது நாட்டில், ஓவியப் பாரம்பரியம் பற்றிய ஐயம் மனதைக் குடைவது ஆகும். கிராமத்து குடிசைகளுக்குள் இன்றைக்குச் சென்று பார்த்தாலும், சாணம் பூசி, சுற்றிலும்-காவிக் கல் வைத்து இருப்பதைப் போன்ற சிறந்த வண்ண ஒழுங்கை பெரிய ஓவியர்கள் கூடச் செய்ய மாட்டார்கள்."

இந்த அளவுக்கு பழைய, ஆனால் இன்றும் வாழும் ஓவிய, சிற்ப மரபுகளின் வேர்களை அறிந்த கே. எம். கோபால், தமது கலையின் உந்து சக்தியை பழைமையிலிருந்தே பெறுகிறார்.



அவரது ஓவியங்களான நீர் வண்ண ஓவியங்கள், நுரை நுரையாக பறந்து செல்வது போன்ற அபூர்வத் தன்மையை உள்ளடக்கியவை. இதனை இவர் எப்படிச் சாதிக்கிறார் என்று பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்துபவை. 'ப்ராணா அப்ராணா' என்ற ஓவியத்தில் ஆண், பெண் முகங்கள் ஒன்றை ஒன்று நோக்கி இருக்கையில் இடையில் ஒரு படம் எடுத்த பாம்பின் வால், மேல் நோக்கி எழுந்து அதன் மீது உச்சியில் ஓர் ஆந்தை அமர்ந்திருக்கிறது. ஆண், பெண் முகங்கள் மனிதனுக்குள் இருக்கும் சந்திரக்கலை, சூரியக்கலை எனும் இரண்டு முச்சு வகைகளையும், கீழிருந்து எழும் பாம்பு குண்டலினி சக்தியையும், மேல் அமர்ந்திருக்கும் ஆந்தை ஞானத்தின் அடையாளத்தையும் குறிக்கும் என்று தாந்திரீக சிந்தனை உள்ளவர்கள் அர்த்தம் கூறுவார்கள். ஆனால் நம்மைப் பொறுத்த மட்டிலும், இது ஒரு விடுகதை போன்று தோன்றினாலும், ஓவியன் தனது வண்ணங்களினால் பார்வை ரீதியாக என்ன சாதித்து இருக்கிறான் என்பது மிகவும் கவனத்துக்கு உரியதாகத் தோன்றுகிறது. இவரது இந்த நீர் வண்ண ஓவியங்களில் ஒரு கவிதைத்தனமான வெளிப்பாடும், விநோத கற்பனை உணர்வும் மேல் தூக்கியிருப்பதை உணரலாம்.

இவரது அண்மைக்கால உலோக புடைப்புச் சிற்பங்கள் மிகவும் அபூர்வமானவை ஆகும். செப்புத் தகடுகளின் மீது செதுக்கி, புடைப்பை உண்டாக்கி இவர் செய்யும் இந்த சிற்பங்களில் பெரும்பாலானவை நமது கோயில்களில் காணப்படும் கணபதி வடிவங்களின் புதிய நீட்சியாகும். இதில் காணப்படும் பல தாந்திரீக சக்கரங்கள், மண்டலங்கள் ஆகியவை பற்றி ஓவியர் கே. எம். கோபால் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்: "கோடுகளுக்கு உயிர் உண்டு. அவற்றின் அமைப்புக்கும், ஆற்றலுக்கும் ஏற்ப அவை அதிர்வு அலைகளை எழுப்பி மனிதனின் சிந்தனையைக்கூட பாதிக்கின்றன.

இதனை உணர்ந்த நமது முன்னோர்கள் இந்த சக்கரங்கள் மூலமாக தாம் நினைத்த பலன்களை ஏற்படுத்த இயலும் என்று நம்பினார்கள். இந்த வகையில், இந்த சக்கரங்களின் கோட்டுச் சக்திகளை, இந்து மத அடிப்படையில் அல்லாமல் கலை அடிப்படையில் அமைத்து நான் கலைப் படைப்பைச் செய்கிறேன்."

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)